***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 362/2019 – P.W. 1 பவானந்தம் த/பெ. உத்தராபதி***
***நாள் 18.05.2026***

குவிமுச பிரிவு 242(2) ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. சாட்சி தற்போது குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 முதல் 4 வரையிலானவர்கள் அரசு போக்குவரத்து கழகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். அரசு போக்குவரத்து கழகத்தை சேர்ந்தவர்கள் பொது ஊழியர்கள் என்ற வரையறைக்குள் வரமாட்டார்கள் என்றால் சரியல்ல. எங்களது அரசு போக்குவரத்து கழகம். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடம் பேருந்து நிலையம் வரிசையாக கடை உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நேர் எதிரே குறிஞ்சி தாளகம், வெங்கடேஷ்வரா மெடிக்கல் கடை, ஐயா ஸ்வீட் கடை, பழக்கடை என்று வரிசையாக கடை உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு கிழக்கேயும் கடை உள்ளது என்றால் சரிதான்.

நான் மருத்துவரிடம் சென்றபோது ஒருவர் கையாலும், காலாலும் உதைத்ததாக சொல்லியுள்ளதை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கன்டிரக்டர் மற்றும் டிரைவர் ஆகிய இருவருமே லிவரால் தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் டிரைவர் தான் லிவரால் அடித்ததாக சொல்லியுள்ளார். நான் எதிரிகள் இருவரும் லிவரால் அடித்ததாக மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 3 அடி நீளம் உள்ள ஜாக்கி ஏற்றும் இரும்பு லிவரால் என்னை பலங்கொண்டு அடித்தார்கள் என்று சொன்னால் என்னை அடித்தார்கள். வலது காலில் எனக்கு எங்கு காயம் என்றால் முட்டிக்கு கீழ் இரத்தக்காயம்.

லிவரால் என்னை எத்தனை அடி அடித்தார்கள் என்றால் 2 அடி அடித்தார்கள். இடது கை மோதிர விரல் மட்டும் வீங்கிவிட்டது. சம்பவ இடத்திற்கு அருகில் புறக்காவல் நிலையம் உள்ளதா என்றால் உள்ளது. அப்போது சட்டமன்ற தேர்தல். பஸ் ஸ்டாப் அருகே Traffic போலீஸ் பேருந்தை ஒழுங்கிபடுத்தினார்கள் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார்கள் என்றால் மருததுவமனைக்கு வந்தார்கள். என்னை போலீசார் மருத்துவமனையில் பார்க்கும்

போது நேரம் 10.00 மணி இருக்குமா என்றால் இருக்கலாம். போலீசாரிடம் மருத்துவமனையில் நடந்த விபரத்தை சொன்னேன். சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசாரை எப்போது மீண்டும் பார்தார்கள் என்றால் மறுநாள் மதியம் 03.00 மணியளவில் என்னிடம் FIR கொடுத்துவிட்டார்கள். நகல் பெற்றுக்கொண்டேன் என்று என்னிடம் கையெழுத்து வாங்கிகொண்டார்கள். மறுநாள் FIR வாங்கியதே பொய் என்றும், அவ்வாறு நகல் பெற்றிருந்தால் காலம் எண்.14 ல் என்னுடைய கையொப்பம் இருக்கும் என்றும், தொழிற்சங்கத்ததை சார்ந்தவர்கள் முதல் நாள் இரவு 10.00 மணிக்கு கொடுத்த புகார் வாக்குமூலத்தில் முதல் விசாரணையில் சொன்னது போல் இல்லாததால் எதிரிகள் மீது நடிவடிக்கை எடுக்க வேண்டும் என்னிடம் 2 வதாக கையொப்பம் வாங்கி கொண்டாரகள் என்றும், அதனை அனுசரித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதல் விசாரணையில் டோரை திறந்து என்னை கையால் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் டோரை திறந்து அடித்ததாக இல்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் என்னை இளக்கியதாஸ் அடித்தவுடன் நான கீழே விழுந்துவிட்டதாகவும் நான் சுதாரித்து எழுந்திருக்கும்போது சுரேஷ் லிவர் எடுத்து தலையில் தாக்கவரும்போது இடது கையால் தடுத்தேன் என்று புகார் வாக்குமூலத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

என்னுடைய பேருந்து 08.30 பஸ் டிரிப் எடுத்து நாகப்பட்டினம் செல்லவேண்டியது. அவர்களுக்கு என்ன டைம் என்றால் 08.25 மணிக்கு டிரிப் எடுத்து நாகப்பட்டினம் செல்லும். பஸ் ஸ்டாண்டில் டைம் கீப்பர் உள்ளாரா என்றால் உள்ளார். சம்பந்தப்பட்ட டைம் கீப்பர் தான் வந்து சம்பந்தப்பட்ட பேருந்தை எடுக்க சொல்லுவாரா என்றால் ஆமாம். அன்றைதினம் யார் டைம் கீப்பர் என்றால் கௌதமன். சம்பவத்தன்று எதிரிகளுடைய வாகனம் எடுக்க வேண்டிய நேரத்தில் எங்களுடைய வாகனத்தை எடுத்தது தவறு என்று, எதிரிகள் சத்தம் போட்டார்கள் என்றும், நான் அரசு போக்குவரத்து கழகம் வைத்துள்ளதால் காலதாமதமாக ஒரு புகார் பொய் வழக்கை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.